தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1983 மார்ச் 8.

மாசி 24, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

‘‘ வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.’’

தான் அறிந்த குற்றத்தில் தன் மனம் தங்குமானால், வானத்தைப்போல் உயர்ந்த தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயனைத் தரும்?

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மானாமதுரை— பரமக்குடி மின்சாரப் பாதையில் களவு போன செப்பு கம்பிகள்.

* வினா எண். 282—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை—பரமக்குடி மின்சார பாதையில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள செப்பு கம்பிகள் களவு போனது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) களவுகளைக் குறித்து மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். காவல் துறையிடம் இந்தப் புகாரின் பேரில் தொடர்பு கொள்ள கோட்டப் பொறியாளர் மின் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மானாமதுரை—பரமக்குடி மின்சாரப் பாதையில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள செப்புக் கம்பிகள் திருடு போனதாக நான் கேள்வி

போட்ட அடுத்த மாதத்திலேயே அதே பகுதியிலேயே அதே லைனிலே மீண்டும் திருடப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. இந்த திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது? குறிப்பாக மானாமதுரை திருடர்கள்தான் அதிகமாகத் திருடுவதாகத் தெரிகிறது. இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 24-11-81 அன்று திருட்டு நடந்திருக்கின்றது. அதன் மதிப்பு ரூபாய் 20,000. இரண்டாவது முறை 24-1-82 அன்று நடந்தது. அதன் மதிப்பு 21,080 ரூபாய். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி போட்டவுடன் மீண்டும் திருடினார்கள் என்று சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து கேள்வி போட வேண்டாம் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) மானாமதுரைப் பகுதியில் திருடு நடந்திருக்கின்றதே தவிர திருடர்கள் அங்கேதான் இருக்கவேண்டும் என்றில்லை, வேறிடங்களிலிருந்து அங்கே வந்தும் திருடலாம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை திருட்டு பற்றிக் கேள்வி போட்ட உடனேயே மீண்டும் திருட்டு நடந்ததால் கேள்வி போட வேண்டாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கேள்வி போடாவிட்டால் மேலும் திருட்டு அதிகமாக ஆவதற்கு உதவி செய்தது போன்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே இப்படிப்பட்ட கேள்வி போட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. தொடர்ந்து திருட்டு மூன்றாவது முறையாக ஆர். எஸ். மங்கலம் பகுதியில் நடந்திருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட திருட்டைக் தடுக்க எங்கெங்கே செப்புக் கம்பிகள் இருக்கின்றன என்பதை அறிந்து கொண்டு அவற்றை எடுத்து பந்தோபஸ்து பண்ணக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில்தான் செப்புக் கம்பிகள் அகற்றப்பட்டு அலுமினியம் கம்பிகள் போடப்படுகின்றன. மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள செப்புக் கம்பிகள் எல்லாம் ஓரிடத்திற்குக் கொண்டு வரப்பட்டு அது மேட்டுப்பாளையத்தில் சேமித்து வைக்கப் படுகின்றது. எனவே செப்புக் கம்பிகள் திருடப்படுவதை எந்தெந்த வகையில் தடுக்கவேண்டுமோ அந்தந்த வகையில் மின்வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, செப்புக் கம்பிகளைத் திருடுகின்றபோது மின்சாரத்தை ஷட் டவுன் பண்ணித்தான் நடக்கின்றது. லாரிகளில் செப்புக் கம்பிகளை ஏற்றிச்

1983 மார்ச் 8]

செல்வதாகக்கூட புகார் வருகின்றது. ஆகவே இதற்கு மின்சார வாரியத்தின் ஊழியர்கள் துணை போகிறார்களா? அப்படியானால் அது கண்டுபிடிக்கப்பட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் புலன் ஆய்விலேதான் தெரியவரும்.

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவர் அவர்களே, இராணிப் பேட்டைக்கு அருகில் ஆற்காட்டிற்கு வருகின்ற சப் லைனிலே இதுபோன்ற செப்புக் கம்பிகள் திருடுவது நடந்து வருகின்றது. அதைப் போக்குவதற்கு அரசு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். அனைத்து செப்பு கம்பிகளும் ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த அளவுக்கு செப்புக் கம்பிகள் சேகரிக்கப்பட்டுள்ளது? அதன் மறு உபயோகம் என்ன? எதற்கு அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கம்பித் தொடர்களைப் பொறுத்த வரையில் செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தக்கூடாது என்று தடுக்கப்பட்டு விட்டது. ஏற்கனவே பயன்படுத்தியிருக்கிற இடங்களில் இப்போது அகற்றப்பட்டு வருகிறது. அதற்கு மாறாக அலுமினிய கம்பிகளை கம்பித் தொடர்களாக இப்போது பயன் படுத்தப்படுகின்றன. அந்த செப்புக்கம்பிகளை எதற்கு பயன் படுத்துகிறீர்கள் என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். செப்புக் கம்பியைப் பொறுத்தவரையில் அது எவ்வளவோ வேலைகளுக்கு பயன்படுத்தக் கூடிய ஒரு நல்ல உலோகம். ஆகையால் தான் அதை பாதுகாக்க வேண்டியுள்ளது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த திருட்டு நடந்ததாகச் சொன்னார்கள். இன்றைக்குச் 1983 ஆம் ஆண்டு நடக்கிறது. இன்னும் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக உண்மையான குற்றவாளியை கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏன்? அல்லது அதிகாரிகள் ஆய்வை சரியானபடி செய்யவில்லையா? அல்லது அதிகாரிகள் இதற்கு உடந்தையாக இருந்து செய்கிறார்களா? அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை அனாவசியமாக இப்போது நாம் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் தற்காலத்தில் திருடர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாக திருடுகிறார்கள். ஆகவே அவர்களைப் பிடித்துக்கொடுத்தால் போதும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, மின்சாரத் தட்டுப்பாடு, கோளாறு ஏற்பட்டு அதை மின்சாரத் துறைக்கு தெரிவிக்கிற நேரத்தில் அவர்கள் வந்து பழுதுபார்க்கும் போது பழுதுபட்ட இடத்தில் தோண்டாமல் ஏராளமான செப்புக்கம்பிகளைக் கொண்ட கேபிள்கள் உள்ள இடத்தில் அதிகமாகத் தோண்டி அவைகளைத் திருடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுத் தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

கோதையாறு மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்.

* வினா எண். 283—திரு. டி. மணி : திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கோதையாற்றிலுள்ள மின்சக்தி நிலையம் இரண்டிலும் எத்தனை மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) இத்திட்டம் நிறைவேற எத்தனை கோடி செலவானது?

(இ) இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 1 யூனிட் என்ன விலைக்கு தரப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 100 மெகாவாட்

(ஆ) ரூ. 2,016 இலட்சங்கள்.

(இ) மின்சாரத்தின் விலை மின் நிலையத்தை பொறுத்து அல்லாது வாரியத்தின் வரவு-செலவுகளை பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. கோதையாறு மின் நிலையம் I-ல் மின் உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு 7.75 பைசாவாகவும் மின்நிலையம் II-ல் 9.02 பைசாவாகவும் உள்ளது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு மின்நிலையத்தில் அந்த திட்டம் முடிவடைந்தவுடன் அதனுடைய திட்ட மதிப்பீட்டுக்கு ஆன மின்சாரம் இப்போது உற்பத்தி செய்யப்படுகிறதா? அது இப்போது கிடைக்காததற்குக் காரணம் என்ன? அப்படிப்பட்ட காரணங்களைக் கண்டு அறிந்து முழுமையாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல மழை பெய்து நீர் நிலையங்கள் நிரம்பினால் நமக்குப் போதிய அளவுக்கு மின் உற்பத்தி அதிலிருந்து